மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
உறுப்பினர்கள்

ஆட்சிமன்றப் பேரவை—

திரு. ஆர்.டி. கணேசன்

திரு. லா. சந்தானம்

திரு. ஆ. ராஜகோபால்

திரு. டி.பி.எம். மைதீன்கான்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
உறுப்பினர்கள்

ஆட்சிமன்றப் பேரவை—

திரு. ப. இராஜரெத்தினம்

மாநில நூலகக் குழு—
உறுப்பினர்

திரு. செ.கு. தமிழரசன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

2003 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிடுகிறேன். அதாவது, சிறப்புக் கவன ஈர்ப்போ, ஒத்திவைப்புத் தீர்மானமோ, நாட்கள் சுருக்கமாக இருப்பதால் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. நான் அங்கீகரித்தவற்றிற்கு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசுத் தரப்பிலே இருந்து பதில் அனுப்பி வைக்கப்படும்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து அமைச்சர் பின்னர் சொல்வார். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்வார்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.